DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S :100/2025</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா. 5</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td colspan="2">நித்தியா</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">கிராம நிர்வாக அலுவலர், மேலக்காவேரி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td colspan="2">ராஜேந்திரன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2"></td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">34</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2">கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 05-11-2025

**முதல் விசாரணை**

நான் மேலகாவேரி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள சொத்துக்குரிய ஆவணங்கள் நகராட்சி வசம் இருப்பதால் , என்னால் கொண்டுவர இயலவில்லை. மேற்படி சொத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் தான் வரி வசூல் செய்து வருவதால் என்னுடைய பொறுப்பில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய கிஸ்து ரசீது **பி.சா.ஆ. 13 ஆ**கும். இது பசலி 1427 முதல் 1435 வரை TS No.934, 936, 1073 ஆகிய சர்வே நம்பர்களுக்கு ஸ்ரீ அய்யனார் மற்றும் பிள்ளையார் கோவில் தற்கால நம்பகர் என்ற பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. யார் பெயரில் பட்டா உள்ளதோ அவர்கள் பெயரில் தான் வரி வசூல் செய்யப்படும் என்றால் ஆமாம் . என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் கிராம நிர்வாக அலுவலர் சீல் உள்ளது . ஆனால் எங்கள் சீல் தமிழில் தான் இருக்கும் . இது ஆங்கிலத்தில் உள்ளது . பழைய காலத்தில் ஆங்கிலத்தில் தான் இருக்கும் என்றால் தெரியாது . ஆனால் அதில் யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசார**ணை

யானையடி ஐய்யனார் கோயில் என்று ஒரு சின்ன கோயில் இருக்கிறது பார்த்திருக்கிறேன். வருவாய் ஆவணங்களில் சர்வே நம்பர் 1073 ஐய்யனார் கோயில் பெயரில் உள்ளது என்றால் நாங்கள் ஆவணங்களை நகராட்சியிடம் ஒப்படைத்து விட்டோம். எங்களிடம் ஆவணங்களில் இல்லை. இந்த சொத்து சம்மந்தமாக டிமான்ட் புக் மற்றும் அவர்கள் ஏற்கனவே செலுத்திய வரி ரசீதை பார்த்து வரி வசூல் செய்வோம் . 1073 சர்வே நம்பருக்கு தொடர்ந்து கோயில் பெயரில் தான் வரி செலுத்தப்பட்டு வருகிறது என்றால் ஆமாம். நான் 3 மாதமாக பணியில் இருக்கும் காலக்கட்டத்தில் கோயில் பெயரில் தான் இந்த சர்வே நம்பர் இருக்கிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசார**ணை

நீதிமன்ற அழைப்பணையில் கோரியுள்ள எந்த ஆவணங்களையும் கொண்டு வரவில்லை என்றால் ரசீது புத்தகம் மட்டும் கொண்டு வந்திருக்கிறேன். மற்ற ஆவணங்களை நான் ஏன் கொண்டுவரவில்லை என்றால் அவை நகராட்சி வசம் உள்ளது. பி.சா.ஆ. 13 07/10/2025 இல் கிஸ்து செலுத்திய ரசீது என்றால் ஆமாம். இது நான் விடுப்பில் இருந்த போது பொறுப்பு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது. இந்த கிஸ்து 1427 பசலி முதல் 1435 வரை 8 பசலிக்கு ஒரே ரசீதாக போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . பொதுவாக கிஸ்து என்பது ஒவ்வொரு வருடத்திற்கும் போடப்படும் என்றால் சரி. இந்த ரசீது வழங்க கிராம நிர்வாக அலுவலர் தற்போது வேறு கிராமத்தில் பணியில் உள்ளார் என்றால் ஆமாம் . இது எந்த அடிப்படையில் இவ்வாறு வழங்கினார் என்பது அவரை கேட்டால் தான் தெரியும் என்றால் ஆமாம் . இந்த ரசீதில் எந்த ஊர் ஐய்யனார் கோயில் என்று குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். இந்த ஆவணத்தில் ஐய்யனார் கோயில் மற்றும் பிள்ளையார் கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள TS No 934, 936. 1073 ஆகியவை மாநகராட்சிக்கு கட்டுப்பட்டவை என்றால் ஆமாம் . இந்த சொத்துக்கள் மாநகராட்சிக்கு கட்டுப்பட்டது என்பதால் இது சம்மந்தமான

எந்த ஆவணமும் மாநகராட்சி தான் வழங்க முடியும் என்றால் ஆமாம் . இந்த சொத்து சம்மந்தமாக எங்கள் ஆளுகையில் இல்லாத சொத்திற்கு பி .சா.ஆ. 13 வழங்க முடியாது என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.